# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா. பன்னீர்செல்வம்**
**சி.ஆர். இராஜகுமார்**
**என். ஜனார்த்தனன்**
**தி. கலைச்செல்வி**
**எம். சௌந்தரராஜன்**
**ஏ. பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.10/2017 நாள்.20-03-2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச்செயலாளர் மு. அன்பரசு வெளியிட்டுள்ள ஊடகச்செய்தி

**காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்துவரும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க நிர்வாகிகளை அரசு உடனடியாக அழைத்துப்பேசி சுமூகத் தீர்வு காண தமிழ்நாடு அரசூழியர் சங்கம் வலியுறுத்தல்**

ஊரக வளர்ச்சித்துறையில் ஊரகச் செயலாளர் முதல் உதவி இயக்குநர் வரையிலான பல காலிப் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டுள்ளன. இதனால் சொல்லொணா பணிச்சுமையில் ஊழியர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். ஏற்கெனவே உள்ள பணிச்சுமையுடன், உள்ளாட்சிப் பணியிடங்கள் அனைத்தும் காலியாக உள்ள நிலையில் கூடுதல் பணிச்சுமையாக மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்ட்தி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு ஊரக வளர்சிட்துறை ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இத்துடன் இத்துறையில் பணியாற்றும் ஊராட்சி செயலாளர்களுக்கு காலமுறை ஊதியம், ஊதிய மாற்றம் போன்ற பலவகை கோரிக்கைகளை முன்னிறுத்தி பல போராட்டங்களை இவர்கள் நடத்திய பின்பு அரசுத்தரப்பில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு சில முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசு அறிவித்து அவற்றை வழங்காமல் காலம்கடத்தியதால் வேறு வழியின்றி இவர்கள் போராட்டங்களை முன்னெடுக்க நேர்ந்தது. அரசானது சாத்தியமற்ற இலக்குகளைத் திணித்து போதிய அவகாசம் வழங்காமல் எல்லை மீறி தொல்லை தந்த வண்ணம் இருப்பதால் அவைபற்றி அரசுத்தரப்பினரிடம் ஊழியர் சங்கத் தலைவர்கள் எடுத்துரைத்தும் அரசு பாராமுகமாக இருந்ததால் அவர்கள் தங்களது நியாயமான உரிமைகளுக்காக போராட்டங்களை அறிவித்து, அப்போராட்டமானது 14.3.2017 ஆம் தேதியிலிருந்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டமாக நடைபெற்று வருகிறது.

ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் தமிழகம் முழுவதும் குடிநீர் வழங்கல் பணி, கிராமப்புற வேலை உறுதி திட்டப் பணி, தூய்மை பாரத இயக்கப் பணி, தனிநபர் கழிப்பறை திட்டப் பணி, மத்திய அரசின் வீடு வழங்கும் திட்டப்பணி போன்ற பல ஊரக வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601



ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைக் கூட நிறைவேற்ற முன்வராமல் அரசாங்கம் அவர்களை போராட்ட களத்தில் நிறுத்தியுள்ளது வேதனைக்குரிய விஷயமாகும். மேலும், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க நிர்வாகிகள் அரசு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போதே இயக்குநர் வெளியிட்ட, வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர்கள் மீது, அரசு ஊழியர் நடத்தை விதிகள்படி நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற அடக்குமுறை உத்திரவால் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது. அரசுத்தரப்பில் நம்பிக்கை தரும் அறிவிப்புகள் எதுவும் வராத நிலையில் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு இன்று முதல்(20.03.2017) காத்திருப்பு போராட்டங்கள் செய்து வருகின்றனர், அதனைத் தொடர்ந்து இயக்குநர் அலுவலகம் நோக்கி பெருந்திரள் முறையீட்டு பேரணி நடத்தவிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

போராட்டம் மேலும் மேலும் தீவிரமடைவதை அரசு வேடிக்கை பார்க்காமல், உடனடியாக ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத் தலைவர்களை நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காணவேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் இன்று (20.03.2017) அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்,

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்